# தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

## மொழிப்பாடமும் மதிப்பீடும்

மொழிப்பாடம் என்பது ஒரு திறன் பாடம். மொழிப்பாடத்தின் வழியாகக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், நடைமுறை இலக்கணம், தானே கற்றல், சொற்களஞ்சியப் பெருக்கம் போன்ற திறன்கள் வளர்க்கப்பட வேண்டும். இத்தகைய திறன்களை வளர்க்கும் நோக்கிலேயே மொழிப்பாட நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மொழிப்பாடங்களில் இடம் பெறும் பாடப்பொருள், மொழித்திறன்களை வளர்க்கும் ஊடகமாகப் பயன்படுகிறது. எனவே மொழிப்பாடத்தில் மதிப்பீடு என்பது பாடப்பொருளறிவைச் சோதிப்பதாக அமையாமல் அப்பாடப்பொருள் வாயிலாகக் கற்ற மொழித்திறன்களைச் சோதிப்பதாகவே அமைய வேண்டும். மொழிப்பாடமல்லாத பிற பாடங்களான கணக்கு, அறிவியல், சமூகஅறிவியல் போன்ற பாடங்கள் அறிவுசார்ந்த பாடங்கள் என்பதையறிவோம். அறிவுசார்ந்த பாடங்களைப் பொருத்தவரை பாடப்பொருளே அடையவேண்டிய திறனாகவும், திறனே பாடப்பொருளாகவும் அமைந்துள்ளதால் மாணவர் பாடப்பொருளடைவு பெற்றுள்ளனரா என்று மதிப்பீடு செய்வதும் திறனடைவை மதிப்பீடு செய்வதும் ஒன்றே.

மொழிப்பாடத்தில் பாடப்பொருளறிவை மதிப்பீடு செய்வதென்பது மொழித்திறன்களை மதிப்பீடு செய்வதாகாது. இத்தகைய வேறுபாடு காரணமாக மொழிப்பாடம் பிற பாடங்களைக் கற்பிப்பதிலிருந்தும் மதிப்பீடு செய்வதிலிருந்தும் மாறுபடுகிறது. இவ்வேறுபாட்டை உணர்ந்து மொழிப்பாடத்தை மதிப்பீடு செய்தல் அவசியமாகும்.

## தமிழ்மொழிப்பாடத்தில் மதிப்பீடு – தற்போதைய நிலை

தமிழ்மொழிப் பாடத்தைத் தற்போது எழுத்துத்தேர்வு கொண்டே மதிப்பீடு செய்கிறோம். எழுத்துத்தேர்வு முறையில் பேசுதல், படித்தல், போன்ற மொழித் திறன்களைச் சோதிக்க வாய்ப்பில்லை. எவற்றை மதிப்பீடு செய்கிறோமோ அவற்றைக் கற்பித்தலுக்கே வகுப்பறையில் முக்கியத்துவம் தரப்படுகிறது. மதிப்பீட்டில் பேசுதல், படித்தல் போன்ற திறன்கள் சோதிக்கப்படாதபோது, கற்பித்தலிலும் இத்திறன்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை.

மேலும் மாணவர்கள் திறனடைவு பெறாதபோது குறையறியவோ, குறைதீர் கற்பித்தலை மேற்கொண்டு மீண்டும் திறனடைவு பெறச்செய்யவோ வாய்ப்பு குறைவு. எனவே மாணவர்கள் பேசுதல், படித்தல் போன்றவற்றில் தேவையான திறன்களை அடையாமலேயே உயர்வகுப்புகளுக்குச் செல்லும் நிலை தற்போது காணப்படுகிறது.

**தமிழ்ப்பாடமும் – தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடும்**

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் மாணவர்களிடம் பொதிந்துள்ள திறன்களைத் தொடர்ச்சியாகவும், முழுமையாகவும் மதிப்பீடு செய்ய முடியும். தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதால், எவ்வெவ்விடங்களில் மாணவர்கள் திறனடைவு பெறவில்லையோ அவற்றைக் கண்டறிந்து குறைதீர் கற்பித்தல் மூலம் திறன்களைப் பெறச்செய்ய முடியும். குறிப்பாக மொழிப்பாடத்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், நடைமுறை இலக்கணம், தானே கற்றல், சொற்களஞ்சியப் பெருக்கம் போன்றவற்றைக் கற்பிக்கவும் மதிப்பிடவும் வாய்ப்புள்ளது. பாடம் சார்ந்த திறன்களான வாழ்க்கைத் திறன்கள், மதிப்புகள், மனப்பான்மைகள், நலவாழ்வு, போன்றவற்றில் மாணவர்கள் திறன் பெறவும் அவற்றை மதிப்பீடு செய்யவும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் வாய்ப்புள்ளது.

## தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

## (CONTINUOUS AND COMPREHENSIVE EVALUATION)

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு என்பது கற்போரின் ஒட்டுமொத்த முழுமையான வளர்ச்சியை உள்ளடக்கிய பரந்துபட்ட அணுகுமுறை. இது பாடம் மற்றும் பாட இணைச் செயல்பாடுகளை உள்ளடக்கிய பள்ளி அளவிலான மதிப்பீடு. பாடச்செயல்பாடுகள் இரண்டு வகைகளில் மதிப்பீடு செய்யப்படும்.

1. **வளரறி மதிப்பீடு ( Formative Assessment)**
2. **தொகுத்தறி மதிப்பீடு (Summative Assessment)**

**வளரறி தேர்வு** (Formative Assessment)

- மாணவர்களின் மனஅழுத்தத்தையும், அச்சத்தையும் குறைக்கும் வகையில் குறிப்பிட்ட இடைவெளியில் குறைந்த அளவு பாடப்பகுதியில் தொடர்ச்சியாகச் செய்யப்படும் மதிப்பீடு.
- பல்வேறு வகையான உத்திகளையும், கருவிகளையும் பயன்படுத்தித் தொடர்ச்சியாகச் செய்யப்படும்.
- இது கற்பதற்காகச் செய்யப்படும் மதிப்பீடாகும். இம்முறையில் குறையறிதல், குறைதீர்கற்பித்தல் ஆகியவற்றிற்கு வாய்ப்பு உண்டு.
- ஆசிரியர் தனது கற்பித்தலை மதிப்பீடு செய்துகொள்ளவும் இது ஒரு வாய்ப்பாக அமையும்.

**குறிப்பு :** தொடர்மதிப்பீடு கற்றலின் வளர்ச்சி நிலையில் மேற்கொள்ளப்படுவதால் வளரறி தேர்வு எனப்படுகிறது.

**வளரறி மதிப்பீட்டின் இரண்டு வகைகள்**

1. **வளரறி மதிப்பீடு (அ) –Formative Assessment- (a) [ FA(a)]**
2. **வளரறி மதிப்பீடு (ஆ) – Formative Assessment- (b) [ FA(b)]**

### வளரறி மதிப்பீடு(அ) – FA (a)

வளரறி தேர்வு (அ) என்பது செயல்பாடுகளை மட்டுமே உள்ளடக்கியது. இது மாணவரின் மகிழ்ச்சியான ஈடுபாட்டையும், பங்கேற்பையும் அளப்பதாக உள்ளது. மாணவர்களின் பாடப்பொருளறிவைச் சோதிக்க வேண்டிய கட்டாயமில்லை. வகுப்பிற்கேற்ப மதிப்பீட்டுச் செயல்பாடு தனிநபர் செயல்பாடாகவோ, குழுச்செயல்பாடாகவோ அமையும். மாணவர்கள் செயல்பாடுகளைச் செய்யும்பொழுது உற்றுநோக்கியோ, அவர்களுடன் இடைவினையாற்றியோ மதிப்பீடு செய்யவேண்டும். மாணவர்களின் படைப்பாற்றல், வெளிப்படுத்தும் திறன் இவற்றிற்கேற்ப மதிப்பீடு அமையும்.

* கற்பித்தல் நடைபெறும்பொழுதே செய்யப்படும் மதிப்பீடு.
* கற்றல்–கற்பித்தல் பற்றி தொடர்ச்சியான மீளாய்வை ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் வழங்குகிறது.
* கற்றல் – கற்பித்தலில் ஏற்படும் இடைவெளிகளைச் சரிசெய்து கொள்ள ஒரு வாய்ப்பாக இது அமைந்துள்ளது.
* மாணவர்கள் கற்கும் முறையறிந்து வழிகாட்ட உதவுகிறது.
* மாணவர்கள் தம்மைத்தாமே சோதித்துக்கொண்டு கற்றலை மேம்படுத்திக்கொள்ள வாய்ப்பளிக்கிறது.
* சகமாணவர் கற்றலுக்கு வழிவகுக்கிறது.
* குறையறி சோதனைக்கும் குறைதீர் கற்பித்தலுக்கும் உதவுகிறது.
* காலஅளவில் நெகிழ்ச்சித் தன்மையுடையது.

## வளரறி மதிப்பீடு (அ) செயல்பாடுகள் – மதிப்பீட்டு முறைகள்

- ❖ பாடுதல்
- ❖ திரும்பக் கூறுதல்
- ❖ பங்கேற்று நடித்தல்
- ❖ கதை கேட்டல்
- ❖ கதை உருவாக்குதல்
- ❖ விவரித்தல்
- ❖ விவாதம்
- ❖ நிகழ்வுகளைப் பதிவு செய்தல்
- ❖ ஒப்புவித்தல்
- ❖ பொம்மலாட்டம்
- ❖ குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல்
- ❖ கதை கூறுதல்
- ❖ வரைதல்
- ❖ திறந்தநிலை வினாக்களுக்கு விடையளித்தல்
- ❖ கலந்துரையாடல்

**செயல்திட்டம்**

- ✓ மாதிரிகள் தயாரித்தல்
- ✓ கைவினைப் பொருட்கள் செய்தல்
- ✓ தகவல்கள் திரட்டுதல்
- ✓ படத்தொகுப்பு தயாரித்தல்
- ✓ நேர்காணல்
- ✓ மேற்கோள்கள் திரட்டுதல்
- ✓ அகரமுதலியைப் பயன்படுத்தித் தகவல் சேகரித்தல்
- ✓ துணுக்குப் புத்தகம் தயாரித்தல்
- ✓ கண்காட்சி/பொருட்காட்சி நடத்துதல்
- ✓ ஆய்வுகள் நடத்துதல்

மேற்குறிப்பிட்ட செயல்பாடுகள் மட்டுமன்றி பாடப்பகுதிக்கும் திறனுக்கும் ஏற்ற பல்வேறு வகையான செயல்பாடுகளைத் தேவைக்கேற்ப ஆசிரியர் வடிவமைத்துக்கொள்க.

## வளரறி மதிப்பீடு (அ) FA(a) – மதிப்பீடு செய்யும் முறை

| வ.எண் | மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண் | தரம் | குறியீடு |
|---|---|---|---|---|
| 1 | செயலைச் சரியாக, நேர்த்தியாக, தெளிவாக, முறையாக, முழுமையாக முடித்தல் | 10 | நனி நன்று | ☆ ☆ ☆ |
| 2 | செயலைச் சரியாக, நேர்த்தியாக, தெளிவாக, முறையாக, முழுமையாக முடித்தல். (ஓரிரு குறைபாடுகள் இருக்கலாம்) | 8,9 | நன்று | ☆ ☆ |
| 3 | முழுமையாக முடிக்கப்படாத நிலை (4 (அ) 5 குறைபாடுகள் இருக்கலாம்) | 6,7 | நிறைவு | ☆ |
| 4 | புரிந்துகொள்ளும் திறன் இல்லாததால் முழுமையாக முடிக்க இயலாத நிலை (5க்கும் மேற்பட்ட குறைபாடுகள்) குறைதீர் கற்பித்தல் தேவை | 5 | முடிக்கப்பட வேண்டும். | ✓ |

## 1. பாடல் பாடுதல்   (தனி மாணவர் செயல்)

பாடப்பகுதியில் கற்றறிந்த பாடல்களையோ மாணவர்கள்  அறிந்த பாடல்களையோ பாடச் செய்து மதிப்பீடு செய்க.

## நோக்கம்

உரிய ஒலிப்புடன் தங்குதடையின்றி ஓசை நயத்துடன் பாடும் திறனைச் சோதித்தறிதல்

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| **1. சரியான உச்சரிப்பு** | **2** |
| **2. தெளிவு** | **2** |
| **3. ஓசைநயம்** | **2** |
| **4. தங்குதடையின்றி, தொடர்ந்து பாடுதல்** | **2** |
| **5. அச்சம், கூச்சம் இன்றி, பாடுதல்** | **2** |
| **மொத்தம்** | **10** |

## 2.மனப்பாடமாக ஒப்புவித்தல்  (தனி மாணவர் செயல்)

செய்யுள் பகுதிகளை மனப்பாடமாக ஒப்புவிக்கச் செய்தல்

**நோக்கம்–** செய்யுளை மனப்பாடமாக உரிய ஒலிப்புடன் ஒப்புவிப்பதைச் சோதித்தல்

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| **1. மனப்பாடமாக ஒப்புவித்தல்** | **5** |
| **2. சரியான உச்சரிப்புடன் ஒப்புவித்தல்** | **2** |
| **3. அடிபிறழாமல் ஒப்புவித்தல்** | **3** |
| **மொத்தம்** | **10** |

## 3. பொம்மலாட்டம் (குழுச் செயல்பாடு)

மாணவர்கள் பாடப்பகுதியில் உள்ள கதையையோ, தாங்கள் அறிந்த வேறு கதையையோ பொம்மலாட்டமாக நிகழ்த்திக் காட்டச் செய்தல்.

### நோக்கம்

மாணவர்கள் கதைப்பகுதியைக் கதைத்தொடர்பு மாறாமல், கதைப்பாத்திரத்திற்கு ஏற்ற குரல் ஏற்றத்தாழ்வுடன், உணர்ச்சியுடன் வழங்குதலைச் சோதித்தல்

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. கதைத்தொடர்பு மாறாமல் வழங்குதல் | 3 |
| 2. குரல் ஏற்றத்தாழ்வு, உணர்ச்சி | 2 |
| 3. பொம்மைகளைப் பொருத்தமாக இயக்குதல் | 3 |
| 4. குழு மனப்பான்மை | 1 |
| 5. பாடல், நகைச்சுவை, கற்பனை | 1 |
| மொத்தம் | 10 |

## 4. பங்கேற்று நடித்தல் ((தனி மாணவர் செயல் மற்றும் குழுச் செயல்பாடு)

பாடப்பகுதியில் உள்ள கதைகள், நாடகங்கள், ஆசிரியரால் வழங்கப்படும் சூழல் இவற்றைக் குழுவாகவோ, தனியாகவோ பாத்திரமேற்று நடித்தல்.

### நோக்கம்

கொடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்ப, பாத்திரமேற்று, பேசியோ, உடல் அசைவுகள் மூலமோ நடிக்கும் திறனைச் சோதித்தறிதல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. முகபாவம், உடலசைவு | 3 |
| 2. குரல் ஏற்றத்தாழ்வு, உணர்ச்சி வெளிப்பாடு | 3 |
| 3. பாத்திரத்தை உணர்ந்து நடித்தல் | 3 |
| 4. ஈடுபாடு | 1 |
| மொத்தம் | 10 |

## 5. படத்தொகுப்பு ((தனி மாணவர் செயல்)

கொடுக்கப்பட்ட தலைப்பிற்கு ஏற்ற படங்களைச் சேகரித்து , ஒட்டி, படத்தொகுப்பு தயார் செய்தல்.

### நோக்கம்

பொருத்தமான தலைப்பிற்கு ஏற்ற படங்களைச் சேகரித்து, தொகுத்து, வரிசைப்படுத்தி, நேர்த்தியாக ஒட்டி படத்தொகுப்பு தயாரித்தலைச் சோதித்தறிதல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. தலைப்பிற்கு ஏற்ற படங்கள் | 3 |
| 2. வரிசைப்படுத்துதல் | 3 |
| 3. நேர்த்தி | 2 |
| 4. தலைப்பிடல் | 2 |
| மொத்தம் | 10 |

## 6. மொழி விளையாட்டுகள் ((தனி மாணவர் செயல் – சிறு குழுச்செயல்)

மாணவர்கள் மொழி விளையாட்டுகளில் ஆர்வமுடனும் ஈடுபாட்டுடனும் பங்கேற்று மொழித்திறன்களை வெளிப்படுத்துதல்.

### நோக்கம்

மொழிசார்ந்த விளையாட்டுகளில் மாணவர்களை ஆர்வமுடன் ஈடுபடச்செய்து அவ்விளையாட்டின் மூலம் வெளிப்படும் மொழித்திறன்களைச் சோதித்தறிதல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. பங்கேற்றலில் ஆர்வம் | 3 |
| 2. முழுமையாக ஈடுபடுதல் | 2 |
| 3. விளையாட்டின்வழி வெளிப்படுத்திய திறன் | 3 |
| 4. விதிகளைப் பின்பற்றுவதில் நேர்மை | 2 |
| மொத்தம் | 10 |

## 7. கதை கூறுதல் ((தனி மாணவர் செயல்)

மாணவர்கள் பாடப்பகுதியில் உள்ள கதையையோ தனக்குத் தெரிந்த கதையினையோ வகுப்பறையில் கூறுதல்.

### நோக்கம்

கதைத் தொடர்பு மாறாமல் உரிய ஏற்றஇறக்கத்துடன் உணர்ச்சி வெளிப்படும் வகையில் கதை கூறுதலைச் சோதித்தறிதல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. கதை நிகழ்வைத் தொடர்ச்சியாகக் கூறுதல் | 2 |
| 2. குரல் ஏற்றத்தாழ்வு, உணர்ச்சியுடன் கூறுதல் | 2 |
| 3. கதைக்கருத்தினை உணர்த்தியமை | 2 |
| 4. ஈடுபாடு | 2 |
| 5. அச்சம், கூச்சம் இன்மை | 2 |
| மொத்தம் | 10 |

## 8. கதை உருவாக்குதல் ((தனி மாணவர் செயல் மற்றும் குழு செயல்)

ஆசிரியரால் வழங்கப்பட்ட தலைப்பிற்கு ஏற்பவோ, குறிப்புகளைக் கொண்டோ, பாதிக்கதை கூறி மீதிக்கதையினை முடிக்கவோ, கதையின் முடிவினை மாற்றிக் கூறவோ, முடிவு கூறிய நிலையில் முன் நிகழ்வு என்ன என்பதைக் கூறவோ, மாணவர்கள் ஆளுக்கு ஒரு தொடர் கூறி, கதையை உருவாக்கவோ செய்தல்.

### நோக்கம்

படைப்பாற்றல், கற்பனை ஆற்றல், சமயோசித அறிவு, கூர்சிந்தனை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கதையை உருவாக்கும் திறனைச் சோதித்தறிதல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. கதையை உருவாக்கும் முயற்சி | 2 |
| 2. படைப்பாற்றல் மற்றும் கற்பனை | 2 |
| 3. வெளிப்படுத்தும் உத்தி | 2 |
| 4. பாத்திரப்படைப்பு | 2 |
| 5. கதைக்கோவை | 2 |
| மொத்தம் | 10 |

## 9. திறந்தநிலை வினாக்களுக்கு விடை கூறுதல் ((தனி மாணவர் செயல்)

மாணவர்களிடம் கேட்கப்படும் திறந்தநிலை வினாக்களுக்குப் பொருத்தமாகவும் கோவையாகவும், ஆழமாகவும் உண்மைத்தன்மையுடனும் சுயசிந்தனையுடனும் பல்நோக்கு சிந்தனையுடையதாகவும் அறிவுபூர்வமாகவும் உரிய விடையினை அளித்தல். வினாக்கள் ஆர்வத்தைத் தூண்டுவனவாக அமைய வேண்டும். மாணவர்கள் அளிக்கும் வினாவிற்கு சரி, தவறு என ஆசிரியர் தீர்ப்பளித்தல் கூடாது.

### நோக்கம்

கேட்கப்படும் வினாக்களுக்கு மாணவர்கள் சுயமாகவும் அறிவுபூர்வமாகவும் ஆர்வமுடன் பதில் அளிக்கும் திறனை மதிப்பீடு செய்தல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. வினாவிற்குப் பொருத்தமான விடை | 2 |
| 2. கோவையாக, தெளிவாக விடையளித்தல் | 2 |
| 3. வினாவிற்கு ஆழமாகவும் / உண்மைத்தன்மையுடனும் பதில் அளித்தல் | 2 |
| 4. பல்நோக்கு சிந்தனையுடனும், சுயமாகவும் பதில் அளித்தல் | 2 |
| 5. ஈடுபாடு | 2 |
| மொத்தம் | 10 |

## 10. குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல் (தனி மாணவர் செயல்)

குறிப்பிட்ட தலைப்பில் பேசச் செய்து மதிப்பீடு செய்க.

### நோக்கம்

உரிய ஒலிப்புடன், தங்குதடையின்றி, குரல் ஏற்றத்தாழ்வுடன், உணர்ச்சியுடன் பேசும் திறனைச் சோதித்தறிதல்.

### மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. சரியான உச்சரிப்பு | 2 |
| 2. தலைப்பிற்கு ஏற்ற பேச்சு | |
| 3. தெளிவு | 2 |
| 4. ஓசைநயம் | 2 |
| 5. தங்குதடையின்றி, தொடர்ந்து பேசுதல் | 2 |
| 6. அச்சம், கூச்சம் இன்றிப் பேசுதல் | 2 |
| மொத்தம் | 10 |

## 11. விவாதம் (சிறு குழு மற்றும் முழுவகுப்புச் செயல்பாடு )

கொடுக்கப்பட்ட தலைப்பினை ஆதரித்தோ எதிர்த்தோ தன் கருத்தினைத் தெளிவாகவும், சுருக்கமாகவும், உறுதியாகவும் உரிய சான்று காட்டியும் வெளிப்படுத்துதல்.

## நோக்கம்

ஆசிரியர் மாணவரின் பங்கேற்பு சகிப்புத்தன்மை, பொறுமை, கருத்துக்கோவை, சொல்லாட்சித்திறன் மேலும் கற்கவேண்டும் என்ற ஆர்வம் போன்றவற்றைச் சோதித்தல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. ஆர்வத்துடன் பங்கேற்றல் | 2 |
| 2. மாற்றுக் கருத்துக்களை எதிர்ப்பின்றிப் பொறுமையுடன் கேட்டல் | 2 |
| 3. கோவையாகப் பேசுதல் | 2 |
| 4. சொற்களைத் திறம்படக் கையாளல் | 2 |
| 5. உரிய சான்றுகளுடன் உறுதிபடப் பேசுதல் | 2 |
| மொத்தம் | 10 |

## 12. கலந்துரையாடல் (சிறு குழு மற்றும் முழு வகுப்புச்செயல்பாடு)

மாணவர்கள் குறிப்பிட்ட தலைப்பில் தங்களது கருத்துகளைப் பகிர்தல், பிறர் கூறும் கருத்துகளைக் குறுக்கிடாமல் பொறுமையாகக் கேட்டல், தங்களின் கருத்துகளை ஆணித்தரமாக எடுத்துரைத்தல், தனது கருத்து தவறாக இருக்கும்போது உண்மைத் தகவலை ஏற்றல்.

## நோக்கம்

குறிப்பிட்ட தலைப்பிற்கு உரிய கருத்துகளைக் குழுவில் வழங்கவும், பிறர் கருத்தை மதிக்கவும், தன்முறை வரும்வரை காத்திருந்து தனது கருத்தை வலியுறுத்தவும், மாற்றுக் கருத்துக்களைத் தன்மையுடன் முன்வைக்கும் திறனும், தவறானதை மாற்றிச் சரியானதை ஏற்கும் மனப்பான்மையும் பெற்றுள்ளனரா என்பதைச் சோதித்தல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. தலைப்பிற்கு ஏற்ற கருத்தைக் குழுவில் வழங்குதல் | 3 |
| 2. பிறர் கூறும் கருத்தைப் பொறுமையுடன் கேட்டல் | 2 |
| 3. தவறானதை மாற்றிச் சரியானதை ஏற்கும் மனப்பான்மை | 3 |
| 4. ஈடுபாடு மற்றும் பங்கேற்பு | 2 |
| மொத்தம் | 10 |

## 13. கருத்து வரைபடம் ((தனி மாணவர் செயல்)

மாணவர்கள் கொடுக்கப்பட்ட பகுதியைப் படித்துக் கருத்தினை உள்வாங்கிக் கொண்டு, விடுபட்ட இடத்தை நிரப்பி, கருத்து வரைபடத்தை நிறைவு செய்தல்.

## நோக்கம்

கொடுக்கப்பட்ட பகுதியைப் படித்தறிதல், கருத்துகளைப் புரிந்து கொள்ளுதல், புரிந்துகொண்ட கருத்துகளை வெளிப்படுத்துதல் போன்ற திறன்களைச் சோதித்தல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. பொருத்தமான இடத்தில பொருத்தமான கருத்தை வெளிப்படுத்துதல் | 5 |
| 2. தெளிவாக வெளிப்படுத்தும் பாங்கு | 3 |
| 3. சுயசிந்தனை வெளிப்பாடு | 2 |
| மொத்தம் | 10 |

## 14. செயல்திட்டம் ((தனி மாணவர் செயல் மற்றும் சிறு குழுச் செயல்பாடு )

கொடுக்கப்பட்ட செயலைத் திட்டமிட்டு, செயல்படுத்தி முடித்தல்.

## நோக்கம்

கொடுக்கப்பட்ட செயல்திட்டத்தை மாணவர்களே திட்டமிட்டு, செயல்படுத்தி, குறிப்பிட்ட காலத்தில் முடிக்கும் திறனைச் சோதித்தறிதல்.

## மதிப்பிடும் முறை

| மதிப்பீட்டுக் கூறுகள் | மதிப்ளபெண்கள் |
|---|---|
| 1. குறிப்பிட்ட காலத்தில் முடித்தல் | 2 |
| 2. பொருத்தமுடைமை | 3 |
| 3. முழுமைத்தன்மை | 2 |
| 4. வெளிப்படுத்தும் தன்மையில் நேர்த்தி | 3 |
| மொத்தம் | 10 |

**வளரறி மதிப்பீடு (ஆ) – FA(b)**

- ❖ மாணவர்களுடைய பாடப்பொருளறிவைச் சோதித்தலே இதன் நோக்கம்.
- ❖ இது எழுத்துவடிவிலான சிறு தேர்வாக அமையும்.
- ❖ முதல் இரண்டு வகுப்புகளுக்கு வளரறி தேர்வு (ஆ) எழுத்து வடிவில் இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை.
- ❖ ஒவ்வொரு பாட அலகு அல்லது கற்றல் அலகின் இறுதியில் நடத்தப்படும்.
- ❖ இதில் குறையறிந்து நீக்கலுக்கான வாய்ப்பு உண்டு.
- ❖ கல்வியாண்டின் ஒவ்வொரு பருவத்திலும் பாடப்பொருளின் அனைத்து வகையான கூறுகளையும் சோதிப்பதாக அமையும். (அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல், படைப்பாற்றல்)

**வளரறி மதிப்பீடு (ஆ) FA(b)**

- ❖ சரியா? தவறா? ஆம் – இல்லை
- ❖ பலவுள் தெரிவு
- ❖ பொருத்துக.
- ❖ கோடிட்ட இடங்களை நிரப்புக
- ❖ வரிசைப்படுத்துக
- ❖ சொல்லக்கேட்டு எழுதுக.
- ❖ சிறுவினா
- ❖ குறுவினா
- ❖ பத்தியில் காலி இடங்களை நிரப்புக
- ❖ வினாடிவினா
- ❖ விடுகதைகள், புதிர்கள்
- ❖ சிக்கல் தீர்க்கும் செயல்பாடுகள்
- ❖ திறன் சார்ந்து வரைதல்
- ❖ வளரறி (ஆ)தேர்வானது

- ∗ மாணவர்களே உருவாக்கும் வினாக்கள்
- ∗ வினாடி வினா
- ∗ விளையாட்டு
- ∗ சிறுதேர்வு (Slip test) போன்ற பல்வேறு வகைகளில் அமையலாம்.

**மேற்குறிப்பிட்ட செயல்பாடுகள் மட்டுமன்றி பாடப்பகுதிக்கும் திறனுக்கும் ஏற்ற பல்வேறு வகையான செயல்பாடுகளைத் தேவைக்கேற்ப ஆசிரியர் வடிவமைத்துக்கொள்க.**

## வளரறி மதிப்பீடு (ஆ) – FA(b) மதிப்பீட்டு முறை

ஒவ்வொரு வளரறிதேர்வு (ஆ) செயல்பாடும் 10 மதிப்பெண்களைக் கொண்டது. மாணவர்கள் அளிக்கும் விடைகளுக்கேற்ப மதிப்பெண் வழங்க வேண்டும்.

**வளரறி மதிப்பீடு செயல்பாடுகள் கீழ்கண்ட வகைகளில் அமையலாம்.**

1. தனிநபர் செயல்பாடு
2. சிறு குழுச் செயல்பாடு
3. முழுவகுப்புச்செயல்பாடு

கற்பிக்கும் பாடப்பொருளுக்கு ஏற்பவும் வகுப்புநிலைக்கு ஏற்பவும் செயல்பாட்டின் தன்மைக்கு ஏற்பவும், தனிநபர் செயலாகவோ, சிறுகுழுச் செயலாகவோ, முழுவகுப்புச் செயலாகவோ ஆசிரியர் வடிவமைத்துக்கொள்ளலாம்.

## குறைதீர் கற்பித்தல்

ஒவ்வொரு வளரறிதேர்வின் முடிவிலும் குறையறி சோதனை நடத்தி தேவைப்படும் மாணவர்களுக்குக் கற்றலடைவு பெறும்வரை பல்வேறு குறைதீர் கற்பித்தல் செயல்பாடுகளை வடிவமைத்து, கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

## தொகுத்தறி மதிப்பீடு (Summative Evaluation)

- ஒவ்வொரு பருவ இறுதியிலும் மாணவர்கள் கற்றல் அடைவு பெற்றுள்ளார்களா? என்பதை அறிவதற்காக வரையறைகளுக்கு உட்பட்டு, திட்டமிட்டு, முறையாக வழங்கப்படுகின்ற எழுத்துத் தேர்வு.
- அறிதல், புரிதல், பயன்படுத்தல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல் ஆகிய கூறுகளை மதிப்பிடுவதாக அமையும்.
- ஒவ்வொரு பருவ முடிவிலும் மாணவர்களின் அடைவு (மதிப்பெண்கள், தரம்) பதிவுசெய்யப்படும்.
- தனிநபர் மதிப்பீடு
- வினாத்தாள் திட்டவரைவை (அறிதல், புரிதல், பயன்படுத்துதல், திறன்) அடிப்படையாகக் கொண்டது.
- காலவரையறைக்கு உட்பட்டது.
- அந்தப் பருவத்தில் கற்பிக்கப்பட்ட பாடப்பொருள் முழுவதையும் உள்ளடக்கிய எழுத்துத்தேர்வு.
- பாடப்பகுதியின் இறுதியில் உள்ள வினாக்கள் மட்டுமின்றி பாடப்பகுதியுடன் தொடர்புடைய வினாக்களையும் உள்ளடக்கியது.

| வளரறி மதிப்பீடு | தொகுத்தறி மதிப்பீடு |
|---|---|
| ➢ கற்பதற்காகச் சோதித்தல் | ➢ கற்றதைச் சோதித்தல் |
| ➢ திட்டமிட்டும் அல்லது தேவைக்கு ஏற்பவும் நடத்தப்படும். | ➢ திட்டமிட்டுச் செயல்படுத்தப்படும். |
| ➢ பருவம் முழுமையும் நடைபெறக் கூடியது. | ➢ பருவ இறுதியில் நடைபெறுவது |
| ➢ குறையறியவும், குறைதீர் கற்பித்தலுக்கும் வாய்ப்புள்ளது. | ➢ கற்றல்அடைவை அறிந்து கொள்ள வாய்ப்புள்ளது. |
| ➢ காலஅளவில் நெகிழ்ச்சித்தன்மையுடைது | ➢ காலவரையறைக்குட்பட்டது |

## மதிப்பெண் மற்றும் தரம் – பதிவேடுகளில் பதிவு செய்தல்

- ஒவ்வொரு பருவத்திலும் குறைந்தது நான்கு வளரறி (அ) மதிப்பீடுகளும் நான்கு வளரறி (ஆ) மதிப்பீடுகளும் நடத்தப்பட வேண்டும்.
- வளரறி மதிப்பீடு ஒவ்வொன்றும் 10 மதிப்பெண்களைக் கொண்டது.
- அவற்றுள் மாணவர்கள் சிறப்பாகச் செயல்பட்ட இரண்டு வளரறி (அ) மதிப்பீட்டு மதிப்பெண்களும் இரண்டு வளரறி (ஆ) மதிப்பீட்டு மதிப்பெண்களும் மட்டும், மதிப்பெண் மற்றும் தரப்பதிவேடுகளில் (**Mark and Grade Register**) பதிவு செய்யப்படும்.
- ஒவ்வொரு பருவ இறுதியிலும் 60 மதிப்பெண்களுக்கு தொகுத்தறி மதிப்பீடு **(SA)** நடத்தப்படும். தொகுத்தறி மதிப்பீட்டில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள், மதிப்பெண் மற்றும் தரப்பதிவேடுகளில் **(Mark and Grade Register)** பதிவு செய்யப்படும்.
- ஒவ்வொரு பருவத்திற்கும் வளரறி மதிப்பீட்டில் **(FA)** 40 மதிப்பெண்களும் தொகுத்தறி மதிப்பீட்டில் **(SA)** 60 மதிப்பெண்களும் என மொத்தம் 100 மதிப்பெண்களுக்கு உரிய தரம் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும்.

## மாற்றுத்திறனாளருக்கான மதிப்பீட்டு நெறிமுறைகள்

- கற்றல் செயல்பாடுகளில் மாற்றுத்திறனாளர்கள் தம்மால் இயன்ற அளவிற்குக் கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.
- கற்றல் அடைவு பெறுவதற்குப் பல்வேறு விதமான வாய்ப்புகள் வரையறையின்றி வழங்கப்படுதல் வேண்டும்.
- மாணவனது இயலாமையைக் காரணம் காட்டி மாணவனது கற்றலை ஒரு எல்லைக்குள் நிறுத்திவிடக் கூடாது.
- அனைத்து மாற்றுத்திறனாளருக்கும் அவரவர் வேகத்திற்கு ஏற்ப கற்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- தனி மாணவருக்கு ஏற்ற கற்றல் திட்டம் (**IEP**-**I**ndividualized **E**ducational **P**rogramme) பொருத்தமான நபர்களால் வடிவமைக்கப்பட்டு ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.
- தனி மாணவருக்கான கற்றல் திட்டம் மாணவரின் தேவைக்கு ஏற்ப எதைக் கற்பிக்க வேண்டும்? எப்படிக் கற்பிக்க வேண்டும்? எப்படி மதிப்பிட வேண்டும்? என்பதை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

# முதல் பருவம்ளு
## குறைந்த பட்ச கற்றல் இலக்குகள்– வகுப்பு வாரியான பட்டியல்

| திறன் பகுதி | I | II | III | IV | V |
|---|---|---|---|---|---|
| கேட்டல் | எளிய ஓசைநயம் மிக்க பாடலைக் கேட்டுப் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும் | இயற்கை சார்ந்த பாடல்களையும், சிந்தனையைத் தூண்டும் கதை, குழு அறிமுக உரையாடல் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும் | வருணனை, விடுகதை பாடல்கள், சிந்தனையைத் தூண்டும் கதைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும். | ஓசைநயம் மிக்க கருத்துப்பாடல், நாட்டுப்புறக் கதைகள், சூழ்நிலைகளில் உற்றுக்கேட்கும் விவரங்கள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும். | விழிப்புணர்வு கதைகள், கலந்துரையாடல் போன்றவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருக்க வேண்டும். |
| பேசுதல் | தன் பெயர், தன் குடும்ப உறுப்பினர்கள் பெயர், ஊர்ப்பெயரைக் கூற அறிந்திருக்க வேண்டும். | உரிய ஒலிப்புடன் பாடவும், படக்கதைகளைப் பார்த்து நிகழ்வைக் கூறவும், வினாக்கள் கேட்கவும், அறிந்திருக்க வேண்டும். | தங்குதடையின்றிப் பேசும் திறன் பெற்றிருக்க வேண்டும். | தங்குதடையின்றியும் வருணனை கலந்தும் பேச அறிந்திருக்க வேண்டும். | குறிப்பிட்ட தலைப்பில் பேசவும், இயல்பாக உரையாடவும் அறிந்திருக்க வேண்டும். |
| படித்தல் | எழுத்துகளை அடையாளம் காணும் திறனும் மூன்று அசைகளுக்கு உட்பட்ட சொற்களைப் படிக்கும் திறனும் பெற்றிருக்க வேண்டும். | படங்களோடு கூடிய சொற்களையும் எளிய சந்தப் பாடல்களையும் சிறு சிறு தொடர்களையும் சிறுவர் படக்கதைகளையும் உரிய ஒலிப்புடன் உரக்கப் படிக்க அறிந்திருக்க வேண்டும். | அறிவிப்புகள், விளம்பரங்கள், சாலைக்குறியீடுகள், கொடுக்கப்பட்ட தகவல்கள், கதைகள் ஆகியவற்றை உரிய ஒலிப்புடன் படிக்க அறிந்திருத்தல் வேண்டும். | கதைகளை நிறுத்தற்குறிகளுக்கு ஏற்ப படித்தறியும் திறன் பெற்றிருக்க வேண்டும். | அழைப்புகள், நிகழ்ச்சி அறிவிப்புகள், துண்டு வெளியீடுகள் ஆகியவற்றைப் படித்து, புரிந்து கொண்டு அதிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். |
| எழுதுதல் | நேர்கோடு, வளைகோடு, சாய்வுக்கோடுகளை எழுதவும், புள்ளிகளை இணைத்து எழுதவும், சொற்களைப் பார்த்து எழுதவும் திறன் பெற்றிருக்க வேண்டும், | படங்களைப் பார்த்துப் பெயர் எழுதவும், படங்களைப் பார்த்து சிறு தொடர் எழுதவும், சொற்களைப் பிறர் சொல்லக் கேட்டு எழுதவும் அறிந்திருத்தல் வேண்டும். | படத்தைப் பார்த்து, சிறு சிறு தொடர்கள் எழுதவும், இடைவெளி விட்டு எழுதவும் பத்தியைப் படித்து எளிய வினாக்களுக்கு விடை எழுதவும் அறிந்திருக்க வேண்டும். | சொல்வதைக் கேட்டுப் பிழையின்றி எழுதவும், பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதவும், புதிர்களை எழுதவும், விடுப்புக் கடிதம் எழுதவும் அறிந்திருக்க வேண்டும். | பொருளுணர்வுக்கு ஏற்ப இடைவெளி விட்டு எழுதவும் பத்தியைப் படித்து அதிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதவும் உறவுமுறைக் கடிதம் எழுதவும் நாட்குறிப்பு எழுதவும் அறிந்திருக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| படைப்பாற்றல் | படங்களுக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டவும், அச்சுப் பதித்து உருவங்கள் செய்யவும் அறிந்திருக்க வேண்டும். | விரும்பிய படம் வரைந்து வண்ணம் தீட்டவும், பெருவிரல் அச்சிலிருந்து உருவங்கள் உருவாக்கவும் கதைகளைக் கூறவும் படத்தொகுப்பு தயாரித்தல் போன்ற செயல்திட்டங்கள் செய்யவும் அறிந்திருக்க வேண்டும். | படத்தை நிறைவு செய்யவும், கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்திக் கதை உருவாக்கவும் அறிந்திருக்க வேண்டும். | படம் பார்த்து வருணித்து எழுதவும் படத்தொகுப்பு உருவாக்கவும், அறிந்திருத்தல் வேண்டும். | பாடல் எழுதவும், அழைப்பிதழ் உருவாக்கவும் அறிந்திருத்தல் வேண்டும். |
| நடைமுறை இலக்கணம் | ஒத்த ஓசையுடைய சொற்களை இனம் காணும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும். | ஒத்த ஓசையுடைய சொற்களை உருவாக்கும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும். | பெயருக்கு ஏற்ற வினைமுடிவை அறிந்து எழுதும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும். | திணை வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்தும் திறனும், காலங்களை அறிந்துகொள்ளும் திறனும் பெற்றிருத்தல் வேண்டும். | இணைப்புச்சொற்களை அறிந்து பயன்படுத்தவும் மரபுத் தொடர்களை அறிந்து யன்படுத்தவும் இணைச்சொற்களை அறிந்து பயன்படுத்தவும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். |
| தானே கற்றல் | – | சொற்களை அகர வரிசைப்படுத்த அறிந்திருத்தல் வேண்டும். | அகரமுதலியைப் பயன்படுத்தவும் சொற்களை அதன் முதல் இரண்டு எழுத்துகளின் அடிப்படையில் அகரவரிசைப் படுத்தவும் அறிந்திருத்தல் வேண்டும். | சிறு சிறு கதைகளைப் படிக்கவும், அகர முதலியைப் பயன்படுத்திப் பொருளறியவும் திறன் பெற்றிருக்க வேண்டும். | சிறு சிறு கதைகளைப் படிக்கவும் அகரமுதலியைப் பயன்படுத்தவும் அறிந்திருத்தல் வேண்டும். |
| சொற்களஞ்சியப் பெருக்கம் | – | சொல் விளையாட்டுகளைப் புரிந்து கொண்டு விளையாடவும் எதிர்ச்சொற்களை அறிந்து கொண்டு பயன்படுத்தவும் அறிந்திருக்க வேண்டும். | பாடம் மற்றும் செய்யுள் பகுதியில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருளறிந்து கொள்ளுதல், சில எழுத்துகளைக் கொண்டு, பல சொற்களை உருவாக்குதல், ஒரு சொல்லில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி, பல சொற்களை உருவாக்குதல் போன்ற திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். | உரைநடை மற்றும் செய்யுள் பகுதியிலுள்ள புதிய சொற்கள், அருஞ்சொற்களுக்குப் பொருள் அறிதல், எதிர்ச்சொல் எழுதுதல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், இணைச் சொற்கள் அமைத்தல் போன்ற திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். | பொருளறிதல், எதிர்ச்சொல் எழுதுதல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், சொற்றொடர் அமைத்தல் மற்றும் மொழி விளையாட்டு, புதிர் விளையாட்டு போன்றவற்றைப் புரிந்து விளையாடவும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். |

www.crsttp.blogspot.com

# பாடநூல் செயல்பாடுகள் பட்டியல்

## முதல்வகுப்பு– வளரறி மதிப்பீடு (அ) FA (a)

| வ. எண் | பாட எண் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | 1. ஆடிப்பாடி மகிழ்வோம் | 5 | பொருத்தமான நிழலைக் கண்டு பிடிப்பேன் | மாணவர்களைக் கொடுக்கப்பட்டுள்ள படத்தை உற்று நோக்கி, சரியான நிழல் படத்தைக் குறியிட்டுக் காட்டச் செய்க. |
| 2 | 1. ஆடிப்பாடி மகிழ்வோம் | 5 | பூனை, பாலைக் குடிப்பதற்கு வழி காட்டுவேன். | கொடுக்கப்பட்டுள்ள படத்தை உற்றுநோக்கி, பூனை எந்த வழியில் சென்றால் பாலைக் குடிக்க முடியும் என்னும் வழியைக் குறிக்கச் செய்க. |
| 3 | 1. ஆடிப்பாடி மகிழ்வோம் | 6 | புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுவேன். | மாணவர்களைப் படத்தை உற்று நோக்கி புள்ளிகளை இணைத்து, முழு உருவம் கொண்ட பழம் உருவாக்கச் செய்க. |
| 4 | 1. ஆடிப்பாடி மகிழ்வோம் | 6 | விடுபட்டதனை வரைந்து வண்ணம் தீட்டுவேன். | படத்தில் விடுபட்டதனை உற்று நோக்கி, வரைந்து, வண்ணம் தீட்டச் செய்க. |
| 5 | 2. என் பந்து | 9 | உன் குடும்பத்தினர் புகைப்படத்தை ஒட்டுக. அவர்களைப்பற்றி, கூறுக. | குடும்ப உறுப்பினர்களின் படத்தைக் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் ஒட்டச் செய்க.( அ ) குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைச் சொல்லி/ வரைந்து அவர்களைப்பற்றி, கூறச் செய்க. |
| 6 | 2. என் பந்து | 15 | நானே நிரப்புவேன். | கொடுக்கப்பட்ட படத்தை உற்று நோக்கி விடுபட்டுள்ள கட்டத்தில் சரியான எழுத்தை எழுதச் செய்க. |
| 7 | 2. என் பந்து | 15 | நானே பேசுவேன். | மாணவனுக்குப் பிடித்தமான விளையாட்டைப் பற்றி கூறச் செய்க. |
| 8 | 2. என் பந்து | 16 | சொல் உருவாக்குவேன். | சூழல் அட்டை ஒன்றைத் தயார் செய்து மாணவர்களை உற்றுநோக்கி சொல் உருவாக்கச் செய்க. |
| 9 | 2. என் பந்து | 17 | படத்திலுள்ள செயல்களைப் பற்றி குழந்தைகளைக் கூறச் செய்க./சொற்களை படிக்கச் செய்க. | படத்திலுள்ள செயல்களைக் குழந்தைகள் அனைவரையும் கூறச் சொல்லவும், படத்திலுள்ள சொற்களைப் படிக்கச் செய்க. |
| 10 | 2. என் பந்து | 19 | வண்ணம் தீட்டுவேன். | படத்திலுள்ள உருவத்திற்கு மாணவர்களுக்குப் பிடித்த வண்ணத்தைத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தீட்டச் செய்க. |
| 11 | 3. செல்லக்குட்டி | 24 | நான் நிரப்புவேன். | படத்தில் உள்ள உருவத்தை உற்று நோக்கி, கட்டத்தில் உள்ள விடுபட்ட எழுத்தை எழுதச் செய்க. |
| 12 | 3. செல்லக்குட்டி | 24 | நான் பேசுவேன். | மாணவனின் ஊரில் நடந்த விழாக்களைப் பற்றிக் கூறச் செய்க. |
| 13 | 3. செல்லக்குட்டி | 26 | சொல் உருவாக்குவேன். | கொடுக்கப்பட்ட சுழல் அட்டையில் உள்ள எழுத்துக்களைப் படித்து, கோடிட்ட இடத்தில் சொற்களை உருவாக்கி எழுதச் செய்க. |
| 14 | 3. செல்லக்குட்டி | 27 | தெரியாத எழுத்தை வட்டமிட்டு நீக்கி எழுதுவேன். | கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் தெரியாத எழுத்தை வட்டமிட்டு நீக்கி, சரியான சொற்களை எழுதச் செய்க.. |
| 15 | 3. செல்லக்குட்டி | 27 | பிடித்தது எது ? அதுவாக மாறுவேன் | குழந்தைகளுக்குப் பிடித்ததைக் கேட்டு அதுவாக மாறி நடிக்கச் செய்க. |
| 16 | 3. செல்லக்குட்டி | 27 | உருவங்கள் செய்வோம் | குழந்தைகளிடம் சீனக்களிமண் கொடுத்து அவர்களுக்குப் பிடித்த உருவம் உருவாக்கச் செய்க. |
| 17 | காய் ! காய் ! | 34 | அறிந்த எழுத்துகளை வட்டமிடுவேன் | மாணவர்கள் அறிந்த எழுத்துகளை உற்றுநோக்கி வட்டமிடச் செய்க.. |
| 18 | காய் ! காய் ! | 36 | எழுத்துகளை முறைப்படுத்திச் சொல்லாக்குவேன் | கட்டத்தில் உள்ள எழுத்துகளைப் படித்துணர்ந்து முறைப்படுத்திச் சொல் உருவாக்கச் செய்க. |
| 19 | காய் ! காய் ! | 36 | அறிந்த எழுத்தை வட்டமிடுவேன், வட்டமிடாத எழுத்துகளைப் படித்து, எழுதுவேன். | மாணவர்கள் அறிந்த எழுத்துகளைப் வட்டமிடச் செய்க. வட்டமிடாத எழுத்துக்களைப் படித்து எழுதச் செய்க. |
| 20 | காய் ! காய் ! | 37 | படத்திற்குரிய வண்ணம் தீட்டுக | படத்தைப் பார்த்து உரிய வண்ணம் தீட்டச் செய்க. |
| 21 | காய் ! காய் ! | 38 | ஒளிந்துள்ள சொற்களைக் கண்டுபிடிப்பேன் | கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்கச் செய்க. |
| 22 | காய் ! காய் ! | 39 | இடை எழுத்தை மாற்றிப் புதிய சொல்லை உருவாக்குவேன் | கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் உள்ள ஓர் எழுத்தை மாற்றி, புதிய சொல்லை உருவாக்கச் செய்க. |

# முதல் வகுப்பு வளரறி மதிப்பீடு (ஆ) FA (b)

| வ. எண் | பாட எண் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | 2. என் பந்து | 15 | செய்தித் தாளைக் கொடுத்து தெரிந்த எழுத்துக்களை வட்டமிடச் செய்யவும். | வகுப்பில் உள்ள மாணவர்களிடம் தமிழ் செய்தித்தாளைக் கொடுத்து, அவன் கற்றுக் கொண்ட எழுத்தை வட்டமிடச் செய்க. |
| 2 | 2. என் பந்து | 16 | சொற்களைச் சேர்த்து எழுதுவேன் | கொடுக்கப்பட்டுள்ள இரண்டு சொற்களை இணைத்து ஒரு புதிய சொல் உருவாக்கச் செய்க. |
| 3 | 2. என் பந்து | 16 | வேறுபட்டதனைக் குறியிடுவேன் | வட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்தை உற்றுநோக்கி வட்டத்தில் உள்ள எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு தொடங்காத சொல்லை வட்டமிடச் செய்க. |
| 4 | 2. என் பந்து | 18 | படத்தின் பெயரைக் கோடிட்டு இணைக்க | படத்தைப் பார்த்து அதற்கு உரிய சரியான பெயரைக் கோடிட்டு இணைக்கச் செய்க. |
| 5 | 2. என் பந்து | 18 | படத்தின் முதல் எழுத்தை எழுதுக | கொடுக்கப்பட்ட படத்தை உற்றுநோக்கி வாசித்து, விடுபட்டுள்ள கட்டத்தில் சரியான எழுத்தை எழுதச் செய்க. |
| 6 | 2. என் பந்து | 19 | வெற்றுக் கட்டங்களை நிரப்புக | கொடுக்கப்பட்டுள்ள சொற்களைச் சரியான கட்டத்தில் நிரப்பச் செய்க. |
| 7 | 3. செல்லக்குட்டி | 26 | சொற்களை வகைப்படுத்துவேன் | கொடுக்கப்பட்டுள்ள ஒத்த ஓசைச் சொற்களை வகைப்படுத்தச் செய்க. |
| 8 | காய் ! காய் ! | 35 | எழுத்துக்களை இணைத்துச் சொல் உருவாக்குவேன் | கொடுக்கப்பட்டுள்ள எழுத்தைப் படித்து வட்டத்தில் உள்ள எழுத்துடன் இணைத்து புதிய சொல் உருவாக்கச் செய்க. |
| 9 | காய் ! காய் ! | 37 | துணை எழுத்தைச் சேர்த்து எழுதுவேன் | கொடுக்கப்பட்டுளள சொற்களுடன் துணை எழுத்தை இணைத்து, புதிய சொல் உருவாக்கச் செய்க. |
| 10 | காய் ! காய் ! | 37 | படத்தைப் பார். உரிய சொல்லை எடுத்து எழுதுக | கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, அதற்குக் கீழே உள்ள இரண்டு கட்டங்களில் உள்ள சொற்களைப் படித்துப் பார்த்து, சரியானவற்றை எடுத்து எழுதச் செய்க. |
| 11 | காய் ! காய் ! | 38 | படத்திற்குரிய சொல்லை எடுத்து எழுதுவேன். | கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் படித்துப் பார்த்து, சரியான படத்திற்குரிய சொல்லை எடுத்துக் கட்டத்தில் எழுதச் செய்க. |
| 12 | காய் ! காய் ! | 39 | கோடிட்ட இடத்தில் ‘ன’கர எழுத்தை எழுதுவேன். | கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் எந்த இடத்தில் புள்ளி வைக்கப்பட்டுள்ளதோ அந்த இடத்தில் ‘ன’ எனும் எழுத்தை நிரப்பி சொற்களைப் பொருள்படும்படி அமைக்கச் செய்க. |

## இரண்டாம் வகுப்பு – வளரறி மதிப்பீடு (அ) FA (a)

| வ. எண் | அலகு / இயல் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | பசுவும் கன்றும் | 4 | இ) நிரப்புக<br>விலங்குகள், பறவைகள் பற்றிய பாடல்களைக் கேட்டறிந்து பாடுக. | விலங்குகள், பறவைகள் பற்றிய பாடல்களைப் பாடச் செய்க. |
| 2 | பந்து எங்கே | 6<br>7 | அ) படங்களுக்கு வரிசை எண் இடுக<br>கதை நிகழ்வைக் கூறி மகிழ்க<br><br>ஆ) வண்ணம் தீட்டி மகிழ்க | படங்களுக்கு வரிசை எண் இடச் செய்க.<br><br>வண்ணம் தீட்டச் செய்க. |
| 3 | தவளையின் தந்திரம் | 14 | – கதை நிகழ்வைக் கூறி மகிழ்க<br>– பெற்றோரிடமிருந்து எளிய கதையைக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக | எளிய கதைகளை வகுப்பறையில் கூறச் செய்க. |
| 4 | பார்ப்போம் படிப்போம் | 18 | ஆ) பள்ளிக்குச் செல்லும் வழியில் நீ பார்த்த பொருள்களின் பெயர்களை எழுதுக | பள்ளிக்குச் செல்லும் வழியில் பார்த்த பொருள்களின் பெயர்களை எழுதச் செய்க. |
| 5 | பார்ப்போம் படிப்போம் | 22 | உ) கொடுக்கப்பட்டுள்ள படங்களின் பெயர்களை உரிய கட்டங்களில் நிரப்புக | கொடுக்கப்பட்டுள்ள படங்களின் பெயர்களை உரிய கட்டங்களில் நிரப்பச் செய்க. |
| 6 | பார்ப்போம் படிப்போம் | 24 | ஊ) விடுகதைக்கு விடை கூறுக | வாய்மொழியாக எழுதச் செய்தல் |
| 7 | என்னைப் பற்றி நானே | 27 | இ) இவை பேசினால், தம்மை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்ளும் | கூறச் செய்க. |
| 8 | சேவல் கூவுது | | பறவைகள், விலங்குகள் பற்றிய பாடல்களைப் பாடுக. | பறவைகள், விலங்குகள் பற்றிய பாடல்களைப் பாடச் செய்க. |
| 9 | வழி பிறந்தது | 33 | நீ பிறருக்கு உதவி செய்திருக்கிறாயா ? என்ன உதவி ? யாருக்கு ?கூறுக. | கூறச் செய்க. |
| 10 | வழி பிறந்தது | 34 | உ) படத்தைப்பாார் சரியான சொல்லை எழுதுக. | எழுதச் செய்க. |
| 11 | வழி பிறந்தது | 35 | எ)படத்தைப் பார்த்து, பறவை,விலங்குகளின் பெயர்களை எழுதுக | |
| 12 | வழி பிறந்தது | 36 | ஐ)கட்டங்களை நிரப்புக, இரண்டாவது எழுத்தை நீக்கி, புதிய சொல்லை உருவாக்குக | |
| 13 | வழி பிறந்தது | 37 | ஒ) ககர,தகர வரிசையில் எழுது | |

## இரண்டாம் வகுப்பு – வளரறி மதிப்பீடு (ஆ) FA (b)

| வ. எண் | அலகு / இயல் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | பசுவும் கன்றும் (1) | 4 | அ) குறு வினா<br>ஆ) பொருள்அறிக<br>இ) நிரப்புக<br>ஈ) விரலில் மையைத் தொட்டு அச்சிட்டு மகிழ்க.<br>உ) கொடுக்கப்பட்ட சொற்களுக்கேற்ப விரலில் மை தொட்டு அச்சிடுக<br>ஊ) விரலில் வண்ண மையைத் தொட்டு விருப்பம்போல் அச்சிட்டு மகிழ்க | ஆசிரியர்<br>பாடலைப்பாடி மாணவர்களை உற்று நோக்கச் செய்க.<br>பிறகு பாடலைக் கேட்டுப் புரிந்து கொண்டுள்ளனரா என்பதை அறிய வாய் மொழியாக வினாக்கள் கேட்டு விடை கூறச் செய்க.<br><br>வாய் மொழியாக விடை கூறச் செய்க.<br><br>பேனா மையை மாணவர்களுக்கு வழங்கி விரல் தொட்டு அச்சிடச் செய்க. |
| 2 | பந்து எங்கே ?<br><br>(2) | 7 | படங்களுக்கு வரிசை எண் இடுக. | • படத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை பார்த்து வரிசை எண்களை இடச் செய்க.<br>• ஒரு மாணவனை ஆசிரியர் கூறிய கதையின் முதல நிகழ்வினைக் கூறச் செய்து, பிற மாணவர்களை அதற்குரிய படம் எது எனக் கண்டறிந்து எண்ணை இடச் செய்க. |
| | | | நினைவு கூர்க<br>• சொல்லிக்கொண்டே எழுதுக<br>• சொல்லிக் கேட்டு எழுதுக | • கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களைப் பார்த்து சரியான ஒலிப்புடன் சொல்லிக் கொண்டே எழுதச் செய்தல்<br>• ஆசிரியர் எழுத்தைச் சரியான முறையில் உச்சரிக்க மாணவர்கள் அதனைக் கேட்டு எழுதச் செய்க. |
| | | 8 | தமிழ் நெடுங்கணக்கு வரிசை அறிக | • மாணவர்களை உயிர்எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள் இரண்டும் சேர்த்து ஒலிக்கும்போது உயிர்மெய் எழுத்துக்கள் உருவாவதை அறியச் செய்க.<br>• உயிர்மெய் எழுத்துக்களின் வரிசை முறையினை அறியச் செய்க. எழுத்துக்களை வரிசை முறையில் எழுதச் செய்க. |
| 3 | யார் ?<br>யார் ?<br>யார் ?<br>(3) | 9 | அ) வாய்மொழியாக விடை தருக<br><br>ஆ) பொருள் அறிக<br><br>இ) எதிர்ச்சொல் அறிக | ஆசிரியர்<br>• பாடலைப் பாடிக் காட்டிய பின் மாணவர்கள் பாடலின் பொருளை அறிந்துள்ளனரா ? என்பதைச் சிறுசிறு வினாக்களைக் கேட்டு அறிந்து கொள்ளச் செய்தல்<br>• வினாக்களுக்கு உரிய விடைகளை வாய்மொழியாகக் கூறச் செய்தல்<br>• விடைகளை வாய்மொழியாகச் கூறச் செய்தல் |
| 4 | பார்ப்போம் படிப்போம் (5) | 16 | எ. உரிய ஒலிப்புடன் படித்துப் பழகு | • படத்தைப் பார்த்து, கொடுக்கப்பட்டுள்ள சொற்களை (பெயர்களை) உரிய ஒலிப்புடன் படித்துக்காட்டி மாணவர்களைச் சொல்லச் செய்தல்<br>• ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியே படிக்கச் செய்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | பார்ப்போம் படிப்போம் (5) | 17 | ஏ. படத்துடன் பெயரைப் பொருத்துக. | • ஆசிரியர் படங்களைக் காட்டி பெயர்களைக் கூறச் செய்தல்<br>• கொடுக்கப்பட்ட பெயர்களைப் படித்துக் காட்டி உரிய படங்களுடன் கோடுகளால் இணைக்கச் செய்தல் |
| 6 | | 18<br><br>19 | அ. படம் பார்த்துப் பெயர் எழுதுக<br><br>படத்திற்குரிய பெயர்கள் வரிசை மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன | ஆசிரியர் பெயர்களைப் படித்துக் காட்டி, ஒவ்வொரு பெயரைப் படிக்கும்போதும் அதற்குரிய படத்திற்கு நேரே அந்தப் பெயரை எழுதச் செய்தல் |
| 7 | | 20 | இ) சொற்றொடரைப் படித்துப் பழகுக. | மாணவர்களைக் கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடரைப் படிக்கச் செய்தல் |
| 8 | | 22 | உ. கொடுக்கப்பட்டுள்ள சொற்களை உரிய கட்டங்களில் நிரப்புக | • ஆசிரியர் மாணவர்களிடம் பயிற்சியில் கொடுக்கப்பட்டுள்ள படங்களின் பெயர்களை ஒவ்வொருவராகக் கூறச் செய்தல்<br>• அப்பெயர்களைக் கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் உரிய வழிகாட்டுதலின் படி நிரப்பச் செய்தல் |
| 9 | வீடு எங்கே ? (6) | 23 | வாய்மொழியாக விடை தருக<br>ஆ. நிரப்புக<br>இ. சொல்லிக்கொண்டே எழுதுக.<br>சொல்லக்கேட்டு எழுதுக | ஆசிரியர் பாடப்பகுதியைப் படித்துக் காட்டி, சிறு சிறு வினாக்கள் கேட்டு வாய் மொழியாக விடை கூறச் செய்தல்<br>வீட்டின் பகுதிகளாக இருந்த உணவுப் பொருட்களின் பெயர்களை எழுதச் செய்தல்<br>கொடுக்கப்பட்ட சொற்களைச் சொல்லிக் கொண்டே எழுதச் செய்தல்<br>சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதச் செய்தல் |
| 10 | என்னைப் பற்றி நானே (7) | 26<br>27 | அ. பொருள் அறிக<br>ஆ. எதிர்ச்சொல் அறிக<br><br>ஈ. சொல்லிக்கொண்டே எழுதுக. சொல்லக் கேட்டு எழுதுக | • பாடத்தில் பயின்று வரும் புதிய சொற்களுக்குப் பொருளையும், எதிர்ச்சொல்லையும் அறிந்து கொள்ளச் செய்தல்<br>• கொடுக்கப்பட்ட சொற்களைச் சொல்லிக் கொண்டே எழுதச் செய்தல்<br>• பலமுறை பயிற்சிக்குப் பின் ஆசிரியர் சொற்களைச் சொல்லக் கேட்டு மாணவர்களை எழுதச் செய்தல் |
| 11 | சேவல் கூவுது (8) | 29 | அ. பொருள் அறிக<br><br>ஆ. எதிர்ச்சொல்<br><br>இ) விடை தருக<br><br>ஈ). சொல்லிக் கொண்டே எழுதுக. சொல்லக் கேட்டு எழுதுக | • பாடப்பகுதியில் பயின்று வரும் புதிய சொற்களுக்குப் பொருளையும், எதிர்ச் சொல்லையும் அறியச் செய்தல்<br>• ஆசிரியர் பாடல் பகுதியைப் படித்துக் காட்டி பொருள் அறியச் செய்தல். எளிய வினாக்களுக்கு வாய்மொழியாக விடையளிக்கச் செய்தல்<br>• கொடுக்கப்பட்ட சொற்களைச் சொல்லிக் கொண்டே எழுதச் செய்தல். ஆசிரியர் சொல்ல எழுதச் செய்தல் |
| 12 | வழி பிறந்தது (9) | 37 | அ) கொடுக்கப்பட்ட சொற்களைக் ககர, தகர வரிசையில் நிரப்புக | • கொடுக்கப்பட்ட சொற்களைக் ககர, தகர வரிசையில் வரிசைப்படுத்தி எழுதச் செய்தல். உரிய கட்டங்களில் நிரப்பச் செய்தல் |

## மூன்றாம் வகுப்பு – வளரறி மதிப்பீடு (அ) FA (a)

| வ. எண் | அலகு / இயல் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | 1. கூடி ஆடி மகிழ்வோம் | 2 | பள்ளியில் எவ்வாறு தோட்டம் அமைக்கலாம் என நண்பர்களுடன் கலந்துரையாடுக | • குழுச் செயல்பாடு<br>• 5 பேர் கொண்ட குழுவாகப் பிரித்து கலந்துரையாடச் செய்க<br>• நண்பர்களுடன் உரையாடும் திறனையும் பிறர் கருத்தினைக் கேட்கும் திறனையும் மதிப்பிடுக |
| 2 | 2. விளையாடுவோம் வாங்க | 5 | சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக | • புத்தகத்திலேயே எழுத வைத்து மதிப்பிடுக. |
| 3 | 2. விளையாடுவோம் வாங்க | 2 | 2. எடுப்போம் ! பேசுவோம் !<br><br>3.உனக்குப் பிடித்த விளையாட்டு ஏதேனும் ஒன்றன் பெயரைக் கூறி, அதன் விதிமுறைகள் மற்றும் விளையாடும் முறை பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுக. | பேசத் தொடங்கும் முறை, பேசும் கருத்துகள் ஆகியவற்றைக் கொண்டு மதிப்பிடுக.<br><br>குழுச் செயல்பாடு |
| 4 | 4.மகிழ்ச்சி | 11 | 1. கொடுத்துள்ள சொற்களைக் கொண்டு சொற்றொடர் அமைக்க. | மாணவர்களை வாய்மொழியாகக் கூறச் செய்து மதிப்பிடுக. |
| 7 | 7.காண்போம் ! கற்போம் ! | 24 | உ) விளையாடுவோம் !<br>சாலைக் குறியீட்டையும் விளக்க அட்டையையும் பொருத்துதல் | • வகுப்பறையில் இரு குழுக்களாகப் பிரித்து, சாலைக் குறியீட்டை ஒரு குழுவிடமும் விளக்க அட்டையை மறு குழுவிடமும் கொடுத்து பொருத்த வைத்து மதிப்பிடுக. |
| 9 | 9. ஊர் செழித்தது | 29 | உ) செயல்திட்டம் | எவ்வாறு செய்ய வேண்டும் எனக் குறிப்புகளைக் கொடுத்து வீட்டில் எழுதி எடுத்து வரச் செய்து மதிப்பிடுக. |
| | | 31 | நீ தாளை எவ்வாறெல்லாம் பயன்படுத்துவாய் ? | மாணவரின் படைப்பாற்றலைக் கொண்டு மதிப்பிடுக. |
| 10 | 10. புதிய ஆத்திச்சூடி | 33 | அ. பேசுக. | ஆசிரியர் வினாக்களை எழுதி ஒரு அட்டைப் பெட்டியில் போடவும். ஒவ்வொரு மாணவனையும் வினா ஒன்று எடுக்கவைத்து,விடையை கூறச் செய்க. |

www.crsttp.blogspot.com

## மூன்றாம் வகுப்பு வளரறி மதிப்பீடு (ஆ) FA (b)

| வ. எண் | அலகு / இயல் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | 1. கூடி ஆடி மகிழ்வோம் | 2 | 1. பாடலில் இடம்பெற்றுள்ள வருணனைகளை எழுதுக.<br>2.சேர்த்து எழுதுக<br>3.விடை எழுதுக | பாடலிலுள்ள வருணனைகளை எழுதச் செய்க மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வாகக் கொடுக்கவும். |
| 1 | 1. கூடி ஆடி மகிழ்வோம் | 2 | 4.சொற்றொடர் உருவாக்கி எழுதுக. | ஆசிரியர் வினாவினைக் கரும்பலகையில் எழுதி மாணவனின் ஏட்டில் தொடராக எழுதச் செய்தல் வேண்டும். மாணவனின் புரிதலையும் அதைச்சார்ந்த எழுதுதலையும் கொண்டு மதிப்பிடுக. |
| 2 | 2. விளையாடுவோம் வாங்க | 4,5<br><br><br><br><br>5<br><br>6<br><br><br>6<br><br>6 | 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.<br>2. சேர்த்து எழுதுக.<br>3. அடைப்புக்குள் இருக்கும் சொற்களைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக<br>4.விடை எழுதுக<br>5. கீழ்க்காணும் சொற்களின் முதல் எழுத்தை மாற்றிப் புதிய சொற்களை உருவாக்குக.<br>6. உங்கள் ஊரைப் பற்றி எழுதி நிரப்புக<br>7.கீழுள்ள எழுத்துகளில் தொடங்கும் சொற்களை எழுதுக | எழுத்துத் தேர்வாகக் கொடுத்து மதிப்பிடுக.<br><br>எழுத்துத் தேர்வு மூலம் மதிப்பிடுக<br><br>எழுத்துத் தேர்வு மூலம் மதிப்பிடுக<br><br>எழுதவைத்து மதிப்பிடுக. |
| 3 | 3.கௌதாரியும் முயலும் | 9 | 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக<br>2. பிரித்து எழுதுக<br>3. சேர்த்து எழுதுக<br>4. விடை எழுதுக<br>5. உரிய சொல்லை எடுத்து எழுதுக. | எழுத்துத் தேர்வு மூலம் மதிப்பிடுக |
| 4 | 4. மகிழ்ச்சி | 10,11 | 1. படத்தில் நிகழும் செயல்கள் பற்றிச் சிறு தொடர்கள் எழுதுக<br>2. படத்தைப் பார்த்து, கோடிட்ட இடத்தை நிரப்புக<br>3. சொற்களை இணைத்துத் தொடராக்குக. | எழுதச் சொல்லி மதிப்பிடுக |
| 5 | 5.மல்லிகை உணவகம் | 13<br>14<br>15<br><br><br><br><br>15 | 1. அகர முதலியைப் பார்த்து, பொருள் எழுதுக.<br>2. பிரித்து எழுதுக<br>3. உரிய விடையை எடுத்தெழுதுக<br>4. விடை எழுதுக<br>5. சொற்களைப் பொருள் விளங்குமாறு எழுதுக<br>6. சொற்களைப் பிரித்து வேறுபொருள் அறிக.<br>7. சொற்களை இணைத்து நிலாவை | அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுத வைத்து மதிப்பிடுக<br><br>எழுத்துத் தேர்வு மூலம் மதிப்பிடுக<br><br>கரும்பலகையில் எழுத வைத்து மதிப்பிடுக.<br>கரும்பலகையில் எழுத வைத்து மதிப்பிடுக.<br>கரும்பலகையில் எழுத வைத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருணித்து எழுதுக | மதிப்பிடுக. |
| 6 | 6.விட்டுக்கொடு விருப்பத்துடன் | 17<br><br><br><br>18<br><br><br><br><br><br><br><br><br><br>19 | அ) அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக<br>ஆ) பிரித்து எழுதுக<br>இ) சேர்த்து எழுதுக<br>ஈ) எதிர்ச்சொல் எழுதுக<br><br>உ) உரிய விடையை எழுதுக<br>ஊ) விடை எழுதுக<br><br>5. விட்டுக்கொடு விருப்பத்துடன் பாடம் உணர்த்தும் நன்னெறி யாது ?<br>எ)புதிய சொற்களை உருவாக்குக<br>ஏ) கொடுக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ப மாற்றி எழுதுக<br>ஐ) கதையைத் தொடர்ந்து எழுதுக. தலைப்பு தருக. | எழுதவைத்து மதிப்பிடுக.<br>விடை எழுத வைத்து மதிப்பிடுக.<br><br>விடை எழுத வைத்து மதிப்பிடுக<br><br>எழுத்துத் தேர்வு வைத்து மதிப்பிடுக.<br><br>எழுத்துத் தேர்வு வைத்து மதிப்பிடுக.<br><br>எழுத்துத் தேர்வாகக் கொடுத்து மதிப்பிடுக<br><br>எழுத வைத்து மதிப்பிடுக.<br><br>ஆசிரியர் வாய்வழியாக எடுத்துக்காட்டு ஒன்றனைக் கூறிவிட்டு மாணவர்களை எழுத வைத்து மதிப்பிடுக. |
| 7 | 7. காண்போம்! கற்போம்! | 24 | அ) அகர முதலியைப் பார்த்து, பொருள் எழுதுக<br>ஆ சேர்த்து எழுதுக<br>இ) விடை எழுதுக<br>ஈ) கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்கேற்ற அறிவிப்பை எழுதுக | எழுத வைத்தோ தேர்வு வைத்தோ மதிப்பிடலாம். |
| 8 | 8. நேர்மை தந்த பரிசு | 27 | அ)அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக<br>ஆ) பிரித்து எழுதுக<br>இ) சேர்த்து எழுதுக<br>ஈ) விடை எழுதுக<br>உ)விடுபட்ட சொற்களைக் காணும் குறிப்புகளைக் கொண்டு நிரப்புக | எழுத்துத் தேர்வு மூலம் மதிப்பிடுக |
| 9 | 9. ஊர் செழித்தது | 28,<br>29<br>30 | அ)அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக<br>ஆ) பிரித்து எழுதுக<br>இ) சேர்த்து எழுதுக<br>ஈ) பொருத்துக<br>உ)அகர வரிசைப்படுத்துக<br>எ) கோடிட்ட இடத்தை நிரப்புக<br>ஏ) பாதிப்படம் இங்கே !மீதிப்படத்தை நீங்கள் வரையலாமே ! | எழுத்துத் தேர்வு மூலம் மதிப்பிடுக<br><br><br><br><br><br>எழுத வைத்தும், வரையவைத்தும் மதிப்பிடுக. |

## நான்காம் வகுப்பு – வளரறி மதிப்பீடு (அ) FA (a)

www.crsttp.blogspot.com

| வ. எண் | அலகு / இயல் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | 1. மெய்சொல்லல் நல்லது பாடல் | 4 | 1. முதல் எழுத்தை மாற்றி வேறு சொற்களை எழுதுக.<br>2. அரசன் எனப்பொருள்தரும் வேறு சொற்களை எழுதுக. | மாணவரை எழுத வைத்து மதிப்பீடு செய்க. |
| 2 | 2. இயற்கை (படக்காட்சி ) | 5,6,7 | 1. படத்தில் உள்ளவை தவிர, நீயறிந்த வேறு விலங்குகளின் பெயர்களை எழுதுக.<br>2. நீரில் வாழும் உயிர்களின் பெயர்களை எழுதுக<br>3. உனக்குத் தெரிந்த மரங்களின் பெயர்களை எழுதுக.<br>4. வருணித்து எழுதுக.<br>5. விளையாடலாம் வாங்க<br>6. செயல்திட்டம். | மாணவன் அன்றாட வாழ்வில் தன்னைச் சுற்றிலும் காணுகின்ற விலங்குகள், உயிரிகள்,மரங்களின் பெயர்களை எழுத வைத்து மதிப்பீடு செய்க.<br><br>மாணவன் கொடுக்கப்பட்ட உயிரியின் படத்தைப் பார்த்து, தான் அறிந்த செய்திகளை எளிய சொற்கள் கொண்ட சொற்றொடர்களை அமைத்து எழுதுமாறு கூறி மதிப்பீடு செய்க<br><br>செய்தித்தாள், இதழ்களில் கிடைக்கலாகும் விலங்குகள், பறவைகளின் படங்களைச் சேகரித்து ஒட்டிவருமாறு கூறி மதிப்பீடு செய்க |
| 3 | 4. வழங்கும் தமிழ் உரைநடை | 14,15 | 1.சொற்றொடர் அமைத்து எழுதுக<br>2. நீ விளையாடும் விளையட்டுகளின் பெயர்களை எழுதுக.<br>3. செயல்திட்டம் | 1. இசைநாற்காலி முறையில் அதைச் செய்யலாம். வட்டத்துள் சிக்காமல் தனித்துவிடும் மாணவனைச் சொற்றொடர் அமைக்க வைத்து மதிப்பீடு செய்க<br>2. மாணவனை எழுத வைத்து மதிப்பீடு செய்க<br>3. செய்தித்தாள் இதழ்களிலிருந்து படங்களைச் சேகரித்து ஒட்டிவருமாறு கூறி மதிப்பீடு செய்க |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | இறகும் இலையும் ஒன்று (6) | 21,22 23 | 1. மாணவர்கள் வட்டமாக அமர்ந்து, ஒவ்வொருவரும் ஒரு தொடரைக் கூறிக் கதை உருவாக்குக.<br>2. படங்களைப் பார்த்துப் பொருத்தமானவற்றை ஒப்பிட்டு எழுதுக.<br>3.படத்தைப் பார்த்துப் புதிர் அமைக்க<br>4. விளையாடலாம் வாங்க<br>5. செயல்திட்டம் | 1. ஆசிரியர் ஏதேனும் ஒரு தலைப்பைத் தந்து அது தொடர்பான கதையை உருவாக்குமாறு கூறுக.<br>2. தரப்பட்டுள்ள படங்களிடையேயான பொதுவான தன்மையென்ன எனக் கண்டறிந்து கூறவைத்து பின் எழுதச் செய்க.<br>3. தரப்பட்ட படத்தைப் பார்த்து அதைப்பற்றி மாணவர் அறிந்த செய்திகளைக் கொண்டு புதிர் அமைக்கச் செய்க<br>5. வீட்டாரிடம் கேட்டு, புதிர் எழுதிவரச் செய்க |
| 9 | 7. பொம்மை உலகம் – உரைநடை | 28,29 | 1. முடியும் எழுத்தில் தொடங்குக<br>2. ஒரு சொல் பலபொருள் எழுதுக<br>3. செயல்திட்டம் | 1. முடியும் எழுத்து /சொல்லில் தொடங்கும் வார்த்தைகளில் மாணவர் அறிந்தனவற்றைக் கூறச் செய்க<br>2. ஏட்டில்/கரும்பலகையில் எழுதச் செய்க அல்லது வாய்மொழியாகக் கூறவைக்க<br>3. களிமண், பஞ்சு,துணி, முதலியன கொண்டு பொம்மை செய்து வருமாறு கூறி, வகுப்பறைக் கண்காட்சி அமைக்க |
| 10 | 8.திருக்குறள் | 33 | 1.முதல் எழுத்தை மாற்றி வேறுவேறு சொல்லாக்குக. | 1.மாணவரைத் தாம் அறிந்த சொற்களை எழுதச் செய்க. |
| 11 | 9. சின்னராசா கண்ணுறங்கு (தாலாட்டு) | 35 | 1.செயல்திட்டம் | 1. மாணவரின் வசிப்பிடத்தில் வழங்கக்கூடிய நாட்டுப்புறப்பாடல் வடிவத்தை அறிந்து எழுதி வரச் செய்க |

# நான்காம் வகுப்பு – வளரறி மதிப்பீடு (ஆ) FA (bs)

| வ. எண் | அலகு / இயல் | பக்க எண் | செயல்பாடு | வகுப்பறையில் |
|---|---|---|---|---|
| 1 | 1. மெய்சொல்லல் நல்லது பாடல் | 4 | 1. பொருள் எழுதுக.<br>2. பிரித்து எழுதுக.<br>3. எதிர்ச்சொல் எழுதுக.<br>4. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வந்துள்ள சொற்களை எடுத்தெழுதுக. | மாணவரை எழுதச் செய்க |
| 2 | 2.இயற்கை (படக்காட்சி ) | 5,6,7 | 1. படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடை எழுதுக.<br>2. படத்தில் உள்ளவற்றில் 'ம' வரிசையில் அமையும் உயிர்களின் பெயர்களை எழுதுக.<br>3. படத்தில் உள்ள விலங்குகள் செய்யும் செயல்களை எழுதுக.<br>4. பொருத்தமான விடையை எடுத்து எழுதுக.<br>5. விலங்குகளையும் அவற்றின் உணவுகளையும் பொருத்தி எழுதுக. | 1.மாணவர் எண்ணிக்கைக்கேற்ப குழு பிரிக்க வேண்டும், ஒருவர் வினாகேட்க மற்றவர் விடை கூற வேண்டும்.<br>2,3.–மாணவர் உரிய விடையை எழுதவோ வாய்மொழியாக கூறவோ செய்க<br>விடையையறிந்து எழுதச் செய்க |
| 3 | 3.பெரியாரைத் துணைகொள் – உரைநடை | 10,11 | 1.பொருள் எழுதுக.<br>2. பிரித்து எழுதுக.<br>3. சேர்த்தெழுதுக.<br>4. நிரப்புக.<br>5. விடை எழுதுக. | 1–4– உரிய விடையை எழுதச் செய்க<br>5. திறந்தநிலை வினாக்களுக்கு விடை கூறுதல் முறையைப் பயன்படுத்துக |
| 4 | 3.நடைமுறை இலக்கணம்– திணை | 11 | 1.சொற்களை வகைப்படுத்துக. | 1. கொடுக்கப்பட்ட சொற்களை அஃறிணை, உயர்திணை என வகைப்படுத்தியபின் அட்டவணையில் எடுத்து எழுதச் செய்க |
| 5 | 4.வழங்கும் தமிழ் –உரைநடை | 14,15 | 1.பொருள் எழுதுக.<br>2. பிரித்து எழுதுக.<br>3. நிரப்புக.<br>4. விடை எழுதுக.<br>5. தேர்ந்தெடுத்து எழுதுக.<br>6.உரிய சொல்லை எடுத்தெழுதி,தொடரை நிறைவு செய்க. | 1–5. மாணவரை உரிய விடையை எழுதச் செய்க |
| 6 | 5.விண்ணப்பம் எழுதுவோம் | 18 | 1.பொருள் எழுதுக.<br>2.பிரித்து எழுதுக.<br>3.வரிசைப்படுத்துக.<br>4.சரியா ?தவறா ? குறியிடுக.<br>5. விடுப்பு விண்ணப்பம் எழுதுக.<br>6. உரிய சொல்லை எடுத்து எழுதித் தொடரை நிறைவு செய்க. | 1,2. உரிய விடையை எழுதச் செய்க.<br>3..உரிய விடையை எழுதவோ, வாய்மொழியாகவோச் கூறச் செய்க<br>5. விடுப்பு விண்ணப்பம் எழுத வைக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 6.இறகும் இலையும் ஒன்று | 20,21 | 1.பொருள் எழுதுக<br>2. பிரித்து எழுதுக<br>3. நிரப்புக<br>4, புதிர்களுக்கான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக<br>5. விடை எழுதுக<br>6. பெயர்ச்சொல்லின் இறுதியில் ‘கள்’ சேர்த்துப் பன்மையாக்குக. | 12,3,5. உரிய விடையை எழுதச் செய்க.<br>திறந்தநிலையில் விடை கூறுதல் முறையைப் பயன்படுத்துக<br>குழு பிரித்து ஒரு குழு ஒரு பெயர்ச்சொல் கூற, மற்றொரு குழு ‘கள்’ விகுதிசேர்த்துச் சொல்லவேண்டும். குழு மாற்றிச் செயலைத் தொடர வேண்டும்.<br>உரிய மதிப்பெண்ணை வழங்குக |
| 8 | 6. நடைமுறை இலக்கணம் – காலங்கள் | 23 | 1. பின்வரும் சொற்களை வகைப்படுத்துக | கொடுக்கப்பட்ட சொற்களை முக்காலமாக வகைப்படுத்தியபின் அட்டவணைப்படுத்தி எழுதச் செய்க |
